

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திருச்சியில், திராவிட முன்னேற்றக் கழகத்தின் மூத்த முன்னோடி கே.கே.எம். தங்க ராஜா அவர்கள் அண்மையில் மறைவெய்தியதையொட்டி இல்லத்திற்கு நேற்று (16.6.2025) நேரில் சென்று குடும்பத்திற்கு ஆறுதல் கூறி, அவரது திருவுருவப் படத்தை திறந்து வைத்தார். உடன், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, உயர்கல்வித் துறை அமைச்சர் கோவி. செழியன், பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, நாடாளுமன்ற உறுப்பினர் திருச்சி சிவா, திருச்சி மாநகராட்சி மேயர் மு.அன்பழகன் மற்றும் நிர்வாகிகள் உள்ளனர்.




தமிழ்நாடு முதலமைச்சர் கழக தலைவர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் மினி பேருந்து ,புதிய விரிவாக்க திட்டத்தை தொடங்கி வைத்ததை தொடர்ந்து வேலூர் மாவட்டத்தில் 4மினிபேருந்து வழித்தடங்கள் மற்றும் 14 மாற்றி அமைக்கப்பட்ட பேருந்து வழித்தடங்களை கழக பொதுச் செயலாளர் , அமைச்சர் துரைமுருகன் அவர்கள் தொடங்கி வைத்தார்.உடன் மாவட்ட ஆட்சியர் வே.இரா.சுப்புலட்சுமி, மாவட்ட கழக செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ., மாவட்ட அவைத்தலைவர் தி.அ.முகமதுசகி, நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.கதிர் ஆனந்த், மாநகர செயலாளர் ப.கார்த்திகேயன் எம்.எல்.ஏ.,குடியாத்தம் சட்ட மன்ற உறுப்பினர் அமலுவிஜயன், மாநகராட்சி மேயர் சுஜாதா ஆனந்தகுமார், துணை மேயர் எம்.சுனில்குமார், மண்டல குழு தலைவர்கள் வீனஸ் ஆர். நரேந்திரன், வெங்கடேசன், மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

தஞ்சையில்

# முதல்வர் மருந்தகத்தில் திடீர் ஆய்வு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் மேற்கொண்டு செயல்பாடு குறித்து கேட்டறிந்தார்!

**தஞ்சை, ஜூன் 17 - முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தஞ்சாவூரில் உள்ள முதல்வர் மருந்தகத்தில் திடீர் ஆய்வு செய்து - மருந்து இருப்பு, சேவையின் தரம் குறித்து நேரடியாக கேட்டறிந்தார்.**

தஞ்சாவூரில் நடைபெறும் பல்வேறு அரசு நிகழ்ச்சிகளில் பங்கேற்பதற்காக வருகை தந்துள்ள முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 15.6.2025 அன்று தஞ்சாவூரில் உள்ள முதல்வர் மருந்தகத்தை திடீரென பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்வின் போது, மருந்துகளின் இருப்பு நிலை, வழங்கும் நடைமுறை, மற்றும் பொதுமக்கள் வருகை குறித்து பணியாளர்களிடம் நேரடியாக விவரங்களை கேட்டறிந்தார். மக்கள் நலன் கருதி குறைந்த விலையில் மருந்துகளை வழங்கும் நோக்கில் தொடங்கப்பட்ட முதல்வர் மருந்தகம் திட்டத்தின் செயல்பாடுகள் மற்றும் சேவையின் தரம் குறித்தும் விரிவாக ஆராய்ந்தார்.

இத்திட்டம் பொதுமக்களிடையே நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளதாகவும், அதன் மூலம் மருத்துவச் செலவுகள் கணிசமாக குறைத்துவருவதாகவும், அந்த மருந்தகம் பணியாளர் முதல்வரிடம் மகிழ்ச்சியுடன் தெரிவித்தார்.

‘நான் முதல்வன் திட்டம்’ ஏழை மாணவர்களுக்கு ஒரு வரப்பிரசாதம்’

# மும்பை ஐ.ஐ.டி.யில் படிக்கப் போகும் மாற்றுத் திறனாளி மாணவி!

## முதல்வருக்கு நன்றி தெரிவித்து காணொலிப் பதிவு!

விருதுநகர், ஜூன் 17-

விருதுநகர் மாவட்டம், சாத்தூர் அருகே உள்ள அரசு மேல் நிலைப் பள்ளி மாற்றுத் திறனாளி மாணவி, ‘நான் முதல்வன்’ திட்டத்தின் மூலம் மும்பை ஐ.ஐ.டி.யில் படிக்க வாய்பபு பெற்றிருக்கிறார். அதற்கு முதல்வருக்கு நன்றி தெரிவித்து மாணவியின் காணொளிப் பதிவு ஒன்று சமூக வலைத் தளங்களில் பரவி வருகிறது.




இப்பதிவில் இம்மாணவி கூறியிருப்பதாவது:-

என் பெயர் யோகேஸ்வரி. நான் விருது நகர் மாவட்டத்தில் சாத்தூர் அருகில் படந்தாள் அரசு மேல்நிலைப் பள்ளியில் படிக்கிறேன். எனக்கு மும்பை ஐ.ஐ.டி.யில் ‘ஏரோஸ்பேஸ்’ பொறியியல் படிப்பு கிடைத்துள்ளது இது எனக்கு மிகவும் மகிழ்ச்சியாக உள்ளது.

எனது அம்மா பட்டாசு தொழிற்சாலையில் வேலை செய்கிறார். அப்பா டீ கடையில் வேலை பார்க்கிறார்.

விருதுநகர் மாவட்ட ஆட்சியர் ஜெயசீலன் அவர்கள், ‘நான் முதல்வரின்’ திட்டம் குறித்து எடுத்துக் கூறி அதில் பங்கேற்கும்படி கூறினார்கள். அதனால் இத்திட்டத்தில் இணைந்தேன். மாவட்ட ஆட்சியர் அவர்கள் எந்த நுழைவுத் தேர்வு எழுதினால் கல்லூரிகளுக்கு செல்லலாம், எந்தெந்த உயர் கல்விக்கு செல்லலாம் என்று சொன்னார்கள். அதன் மூலம் எனக்கு ஜே.இ.இ. மெயின் தேர்வுக்கு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலேயே பதிவு செய்தார்கள். பதிவு செய்தது டன் இத்தேர்வை எப்படி எழுத வேண்டும். எப்படியெல்லாம் கேள்வித் தாள்கள் இருக்கும் என்றெல்லாம் சொல்லித் தந்தார்கள்.

இத்தேர்விலும் வெற்றி பெற்றேன். மேலும் ஜே.இ.இ. அட்வான்ஸ் பயிற்சிக்கு ஈரோட்டிற்கு 40 நாட்கள் கூட்டிச் சென்றார்கள். அதிலேயும் நான் இணைந்தேன். அத்தேர்விலும் நான் வெற்றி பெற்றேன். மேலும் கவுன்சிலிங் குறித்தும் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலேயே சொல்லிக் கொடுத்தார்கள்.

இதற்கெல்லாம் நெடுஞ்செழியன் சார் அவர்கள், எனக்கு மிகவும் உதவி செய்தார்கள். அவருக்கு இந்நேரத்தில் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த ‘நான் முதல்வர்’ திட்டத்தை கொண்டு வந்த தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு மிக்க நன்றி. ‘நான் முதல்வன்’ திட்டம் என்பது ஏழை எளிய மாணவர்களுக்கு ஒரு வரப் பிரசாதம் என்றே சொல்லலாம். எங்களைப் போன்ற ஏழை மாணவர்களுக்கு இத்திட்டம் மிகவும் உதவியாக இருக்கிறது. இத்திட்டத்தை கொண்டு வந்த முதல்வர் அவர்களுக்கு மிக்க நன்றி.

இத்திட்டத்தில் என்னை பங்கேற்க செய்த விருதுநகர் மாவட்ட ஆட்சியர் ஜெயசீலன் அவர்களுக்கு மிக்க நன்றி. உயர் கல்விக்கான எல்லா செலவுகளையும் நான் பார்த்துக் கொள்கிறேன் என்று கூறியுள்ள மாவட்ட ஆட்சியருக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.



இராணிப்பேட்டை மாவட்டம், அரக்கோணம் வட்டம், பள்ளூர் கிராமத்தில் வராஹி அம்மன் திருக்கோவிலுக்கு பஞ்சமி தினத்தன்று வருகின்ற பக்தர்களுக்கு, முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பின் படி அன்னதானம் வழங்கும் திட்டத்தினை கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் இராணிப்பேட்டை ஆர்.காந்தி தொடங்கிவைத்தார். இந்நிகழ்ச்சியில், நெமிலி ஒன்றிய பெருந்தலைவர் பெ.வடிவேலு, இந்துசமய அறநிலையத் துறை இணை ஆணையர் அனிதா, அறங்காவலர் குழு தலைவர் திருநாவுக்கரசு, மாவட்ட அறங்காவலர் குழு உறுப்பினர், பூர்ணிமா, பள்ளூர் ஊராட்சி மன்ற தலைவர் பிரதாப், ஒன்றிய குழு உறுப்பினர் சரஸ்வதி பார்த்திபன், மோகன், அருள்தாஸ், சரவணன், அப்துல் நசீர், சம்பந்தன், சேகர், லட்சுமிபதி ஆகியோர் கலந்து கொண்டனர்.

ஒருங்கிணைந்த மும்பை தி.மு.க. முன்னாள் செயலாளர்

# த.மு.பொற்கோ 11 வது நினைவேந்தல் நிகழ்வு!

## திருவுருவப் படத்தை ம.சேசுராசு திறந்து வைத்தார்!

மும்பை, ஜூன் 17 -

ஒருங்கிணைந்த மும்பை தி.மு.க. செயலாளர் மறைந்த த.மு.பொற்கோ அவர்களின் 11வது நினைவேந்தல் நிகழ்வு: 15.6.2025 அன்று இரவு 7மணிக்கு கலைஞர் மாளிகை தாராவியில் நடைபெற்றது.

தி.மு.க. பொறுப்புக்குழு உறுப்பினர் அன்பழகன் பொற்கோ வரவேற்புரையாற்றினார். பொற்கோ அவர்களின் படத்தை திமுக பொறுப்புக்குழுத் தலைவர் ம.சேசுராசு திறந்து வைத்து உரையாற்றினார்.

பள்ளி மாணவ மாணவிகளுக்கு பள்ளிப்பை,நோட்டுகள்மற்றும் இலவச நல உதவிகளை பம்பாய் திருவள்ளுவர் மன்றம், மற்றும் கலைஞர் தமிழ்ச் சங்கம் செயலாளர் ஜேம்ஸ் தேவதாசன் வழங்கினார். பொறுப்புக்குழு உறுப்பினர்கள் ம.நீதிதுரை, மாறன் ஆரியசங்காரன் முன்னிலை வகித்தார்கள்.

மும்பை திராவிடர் கழக தலைவர் பெ.கணேசன், விசிக அமைப்பாளர் எஸ். சாலமோன்ராஜா, பகுத்தறிவாளர் கழக அமைப்பாளர் அ.ரவிச்சந்திரன், மகேந்திரன், ஆதி திராவிட மகாஜன தலைவர் எஸ். பி.ஆனந்த்,பி.பேபிராஜ், சுரேஸ்குமார், தமிழ் ஓட்டுநர்கள் சங்கம் தலைவர் ஆர்.ரவிரஜினி, ஆ.பாலசுப்பிரமணியன் பாபு விஸ்ணு, சார்லி சேலம் மா. சீனிவாசன்,அன்பில் ரன்ஜன், சி.பாண்டியன், பூ.சு. அழகர்ராஜா, ரவி குணசீலன், எம். ராஜன், பிரபு பிலிப்,தே.ஸ்டீபன், பொய்சர் க.மூர்த்தி திருமதி சுகுணா அன்பழகன், திருமதி.வளர்மதி கணேசன், திருமதி.வெண்ணிலா சுரேஸ், ஆகியோர் நினைவேந்தல் உரை நிகழ்த்தினார்கள்.

சமீபத்தில் அகமதாபாத்தில் நடந்த விமான விபத்தில் உயிரிழந்த அனைவருக்கும் இரங்கல் தெரிவிக்கும் வகையில் ஒரு நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது. வளர்மதி பொற்கோ நன்றி கூறினார்.

நினைவேந்தல் முடிந்து அனைவருக்கும் திரு. பொற்கோ அவர்கள் குடும்பத்தினர் சார்பில் இரவு உணவு வழங்கப்பட்டது.

ஊடகங்களில் வெளியான செய்தி!

# ஜாக்டோ - ஜியோ மறுப்பு!

## மாநில ஒருங்கிணைப்பாளர்கள் அறிக்கை!

சென்னை, ஜூன் 17-

ஜாக்டோ - ஜியோ சார்பில் கடந்த 13.06.2025 அன்று நடிகரும், அரசியல் கட்சித்தலைவருமான விஜய் சந்தித்ததாக வெளியான ஊடகச்செய்திக்கு ஜாக்டோ-ஜியோவின் மாநில ஒருங்கிணைப்பாளர்கள் சார்பாக மறுப்பு தெரிவித்து விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

கடந்த 13.06.2025 அன்று நடிகரும், தமிழக வெற்றிக் கழகத்தின் தலைவருமான விஜய் அவர்களை தமிழ்நாடு உயர்நிலை மேல்நிலைப்பள்ளி பட்டதாரி ஆசிரியர் கழகத்தின் நிறுவனத் தலைவர் மாயவன் சந்தித்து அரசு ஊழியர் மற்றும் ஆசிரியர்களின் பழைய ஓய்வூதியம் உள்ளிட்ட கோரிக்கைகள் சம்பந்தமாக பேசிய செய்தி என்பது ஜாக்டோ-ஜியோ மாநில ஒருங்கிணைப்பாளர் சந்தித்துப்பேசியதாக பல்வேறு ஊடகங்களில் வெளியாகியுள்ள செய்திக்குஜாக்டோ-ஜியோ சார்பில் மறுப்பைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

ஜாக்டோ-ஜியோ அமைப்பு தமிழ்நாட்டில் அரசு ஊழியர், ஆசிரியர், அரசுப்பணியாளர்களின் கோரிக்கைகளுக்காக கடந்த இருபத்தைந்து ஆண்டுகளுக்கு மேலாக தொடர்ந்து போராடி வருகின்ற வரலாற்றுச் சிறப்பு மிக்க பேரமைப்பாகும். அப்படிப்பட்ட கோரிக்கைகளுக்காக எந்த ஆட்சியாக இருந்தாலும் சமரசமற்ற முறையில் பல்வேறு கட்ட போராட்டங்களை நடத்தி ஊதிய மாற்றம், பறிக்கப்பட்ட உரிமைகள் மீளப் பெறப்பட்டது உள்ளிட்ட கோரிக்கைகளை வென்றெடுத்துள்ளது. இன்றைக்கும் பழைய ஓய்வூதியம் உள்ளிட்ட கோரிக்கைகளுக்காக ஒன்றிய, மாநில அரசுகளிடம் தொடர்ந்து போராடி வருகிறது.

இன்றைக்கும் தமிழ்நாடு அரசிடம் ஜாக்டோ-ஜியோ சார்பாக தொடர்ந்து பேச்சுவார்த்தை நடத்தியும், பல்வேறு கட்ட போராட்ட நடவடிக்கைகள் விளைவாகவும் அரசிடமிருந்து சரண்டர், மகப்பேறு விடுப்பு பணிவரன்முறைக்கு சேர்ப்பது உள்ளிட்ட 9 கோரிக்கைகள் பெற்றுள்ளோம். மேலும், பழைய ஓய்வூதியத்திற்காக அமைக்கப்பட்ட குழு அறிக்கை 30.09.2025-க்குள் பெறப்படும் என உத்திரவாதம் வழங்கப்பட்டுள்ளது. எனவே, அரசிடமிருந்து நல்ல முடிவுகள் வரும் என்று எதிர்பார்த்து தற்காலிகமாக இயக்க நடவடிக்கைகளை ஒத்திவைத்துள்ளோம்.

ஜாக்டோ-ஜியோ பேரமைப்பு அரசு ஊழியர், ஆசிரியர், அரசுப்பணியாளர் அமைப்புகள் சார்பாக பல்வேறு சங்கங்கள் கொண்ட கூட்டமைப்பாகும். இதில் பங்கேற்றுள்ள அந்தந்த சங்கங்களின் மாநில அமைப்புகளின் முடிவுகளுக்கேற்ப தனித்துவமாக செயல்படுவது அந்தந்த சங்கங்களின் தனிப்பட்ட முடிவாகும். அதற்கும் ஜாக்டோ-ஜியோவிற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை.

எனவே, ஜாக்டோ-ஜியோ சார்பாக மேற்கண்ட நடிகர் மற்றும் சங்கத் தலைவர் சந்தித்ததாக வெளியான தகவல் முற்றிலும் உண்மைக்குப்புறம்பானது. அதற்கும் ஜாக்டோ-ஜியோவிற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்பதை தெரிவித்துக்கொள்கிறோம். எனவே, பத்திரிக்கைகளில் இச்செய்தியை திரும்பப்பெற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறோம்.

இவ்வாறு அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இஸ்ரோ முன்னாள் அறிவியலாளர்

# எழுத்தாளர் நெல்லை சு.முத்து மறைவு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, ஜூன் 17 -



இஸ்ரோ முன்னாள் அறிவியலாளர் மற்றும் எழுத்தாளர் நெல்லை சு.முத்து அவர்களின் மறைவை யொட்டி தமிழ்நாடு முதல மைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இரங்கல் தெரி வித்துள்ளார்.

இது குறித்து முதல்வர் அவர்கள் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தி வருமாறு:

இஸ்ரோ முன்னாள் அறிவியலாளர் மற்றும் எழுத்தாளர் நெல்லை சு.முத்து அவர்கள் மறைந்த செய்தியறிந்து வேதனையுற்றேன்.

ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதீஷ் தவான் விண்வெளி மையத்தில் பணியாற்றியவர் சு.முத்து அவர்கள். அறிவியல், விண்வெளி ஆராய்ச்சி குறித்து ஏராளமான நூல்களை எளிய தமிழில் எழுதியுள்ள தோடு மொழி பெயர்ப்பாளராகவும் அறிவியல் தமிழுக்குப் பங்காற்றியுள்ளார்.

முன்னாள் குடியரசுத் தலைவர் அப்துல் கலாம் அவர்களுடன் பணியாற்றிய முத்து அவர்கள், அப்துல் கலாம் அவர்கள் குறித்தும் பல நூல்களை எழுதி யுள்ளார்.

இந்தியாவுக்குப் பெருமை சேர்த்து, தமிழ்மொழிக்கு வளம் சேர்த்து வாழ்ந்து மறைந்துள்ள நெல்லை சு.முத்து அவர்களை இழந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கும் நண்பர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் அவர்கள் தமது இரங்கல் செய்தியில் கூறியுள்ளார்.



ஒருங்கிணைந்த மும்பை தி.மு.க. செயலாளர் மறைந்த த.மு.பொற்கோ அவர்களின் 11வது நினைவேந்தல் நிகழ்வு: 15.06.2025 அன்று இரவு 7மணிக்கு கலைஞர் மாளிகை தாராவியில் நடைபெற்றது. தி.மு.க. பொறுப்புக்குழு உறுப்பினர் அன்பழகன் பொற்கோ வரவேற்புரை யாற்றினார். பொற்கோ அவர்களின் படத்தை தி.மு.க. பொறுப்புக்குழுத் தலைவர் ம.சேசுராசு திறந்து வைத்து உரையாற்றினார்